# பெருநகர சென்னை மாநகராட்சி

# GREATER CHENNAI CORPORATION

## நிதி நிலை அறிக்கை

## 2025 – 2026

## மாண்புமிகு மேயர் அவர்களின்

## தொடக்க உரை

## கல்வித் துறை

**1. பத்தாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் ஆர்வமுள்ள மாணவ மாணவியர்களை தேர்ந்தெடுத்து, போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள ஆலோசனைகள் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.**

சென்னை பள்ளிகளில் பத்தாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல், மற்றும் பொது அறிவு ஆகிய பாடங்களை கற்றுத் தரும் ஆசிரியர்களைக் கொண்டு, போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்வதற்குத் தேவையான விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைகள் வழங்குதல்.

**அறிவிப்பு : 1**

**81 சென்னை பள்ளிகளில் 10ஆம் வகுப்பு, 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் படிக்கும் ஆர்வமுள்ள மாணவ மாணவியர்களை தேர்ந்தெடுத்து கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல் மற்றும் பொது அறிவு ஆகிய பாடங்களை கற்றுத் தரும் ஆசிரியர்களைக் கொண்டு, போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள ஆலோசனைகள் வழங்கவும், போட்டித் தேர்விற்கு விண்ணப்பித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்வதற்காகவும் மாணவ மாணவியர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப, பள்ளி ஒன்றுக்கு ஊக்கத்தொகையாக ரூபாய்15,000/- முதல் ரூபாய்1,50,000/- வரை என்கிற அடிப்படையில், ரூபாய் 40.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**2. 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கான போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுபவருக்கு பரிசுகளும், சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகையும் வழங்குதல்.**

சென்னை பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு செய்தித்தாள் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து, அதன் அடிப்படையில் வினாடி வினாப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல்.

அறிவிப்பு : 2

**சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு செய்தித்தாள் வாசிக்கும் பழக்கத்தினை ஊக்குவித்து அதனடிப்படையில் குறிப்புகள் தயார் செய்யவும், வினாடி வினாப் போட்டிகள் நடத்திடவும், அந்தந்த பள்ளியின் தலைமை ஆசிரியரால், தமிழ், ஆங்கிலம் மற்றும் சமூக அறிவியல் பாடங்களின் ஆசிரியர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து வினாத்தாள்கள் தயாரித்து, தேர்வுகள் நடத்தப்படும். அவற்றில், வெற்றி பெறும் மாணவ மாணவியர்களுக்கு பள்ளி மற்றும் மண்டலம் அளவிலான போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகளும், அக்குழுவில் சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படும். இதனை மேற்கொள்ளும் வகையில் பள்ளி ஒன்றுக்கு ரூபாய் 15,000/- முதல் ரூபாய் 75,000/- வரை 211 பள்ளிகளுக்கு ரூபாய் 86.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**3. உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் அரசு பொதுத்தேர்வுகளில் சிறந்த மதிப்பெண்கள் பெறுவதற்காக "வளமிகு ஆசிரியர் குழு" அமைத்தல்.**

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் அரசு பொதுத்தேர்வுகளில் சிறந்த மதிப்பெண்கள் பெறுவதற்காக, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்களைக் கொண்டு "வளமிகு ஆசிரியர் குழு" அமைக்கப்படும்.

அறிவிப்பு : **3**

**சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில், காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் பள்ளிகளைக் கண்டறிந்து, அப்பள்ளிகளில் விருப்பத்துடன் பணியாற்ற விரும்பும் ஆசிரியர்களைக் கொண்டு, மண்டலம் வாரியாக "வளமிகு ஆசிரியர் குழு" (Pooling of Resource Teachers) அமைக்கப்படும். அக்குழுவின் ஆசிரியர்களைக் கொண்டு, அம்மண்டலத்திற்குட்பட்ட பள்ளி மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கான பாடக்குறிப்புகளை தயார் செய்யவும், பயிற்சி வழங்கும் பணிக்காகவும் மதிப்பூதியம் மற்றும் பிற செலவினங்களுக்காக ஒரு மண்டலத்திற்கு ரூபாய் 5.00 இலட்சம் வீதம் 15 மண்டலங்களுக்கு ரூபாய் 75.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**4. பள்ளிகளில் வகுப்பறைகளுக்கு புவி உருண்டை (Globe) வழங்குதல்.**

சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளின் வகுப்பறை ஒவ்வொன்றுக்கும் ஒரு புவி உருண்டை (Globe) வழங்குதல்.

அறிவிப்பு : **4**

**சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்கள் புவியியல் பாடத்தினை எளிதாக கற்கும் வகையில் ஒவ்வொரு வகுப்பறைக்கும் தலா ஒரு புவி உருண்டை (Globe) வீதம் 2,300 வகுப்பறைகளுக்கு ரூபாய் 39.10 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

**5. தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள் பணியமர்த்துதல்.**

சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும், மாணவ மாணவியர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக தற்காலிக விளையாட்டு ஆசிரியர்கள் பணியமர்த்துதல்.

**அறிவிப்பு : 5**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் 69 நடுநிலைப் பள்ளிகள், 72 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும், மாணவ மாணவியர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தி, பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்ளவும், கோப்பைகளை வெல்லவும் அவர்களுக்குப் பயிற்சி அளித்து தயார்படுத்தும் விதமாக ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள், நடுநிலைப் பள்ளிகளுக்கு மாதம் ரூபாய் 15,000/- உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாதம் ரூபாய் 18,000/- என்ற வகையில், மொத்தம் 141 உடற்கல்வி ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்டையில் பணியமர்த்தப் படுவார்கள். இதற்கென ரூபாய் 2.34 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**6. மேல்நிலை பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.**

சென்னை பள்ளிகளில் விளையாட்டு மைதானங்கள் உள்ள மேல்நிலை பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்காக அப்பள்ளிகளில் பணிபுரியும் விளையாட்டு ஆசிரியர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், அப்பள்ளிகளுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.

**அறிவிப்பு : 6**

**29 சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் பயனடையும் வகையில் விளையாட்டு மைதானங்களில் கூடைப் பந்து, எறி பந்து, கால் பந்து, இறகுப் பந்து, கோ-கோ, கபடி, நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதல் ஆகிய விளையாட்டுகளில் மாணவ மாணவியர்கள் தங்களை ஈடுபடுத்தி அவ்விளையாட்டு பயிற்சிகளை மேற்கொள்ள ஏதுவாக அப்பள்ளிகளின் தேவைகளுக்கேற்ப ரூபாய் 1.00 இலட்சம் முதல் 1.20 இலட்சம் வரை விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட ரூபாய் 35.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**7. உயர்நிலைப் பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்**

அறிவிப்பு **:7**

**26 சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் பயனடையும் வகையில், கூடைப் பந்து, எறி பந்து, கால் பந்து, இறகுப் பந்து, கோ-கோ, கபடி, நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதல் ஆகிய விளையாட்டுகளில் தங்களை ஈடுபடுத்தி பயிற்சிகள் மேற்கொள்ள ஏதுவாக அப்பள்ளிகளின் தேவைகளுக்கேற்ப ரூபாய் 1.15 இலட்சம் வீதம் விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட ரூபாய் 30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**8.** நடுநிலைப் பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்

அறிவிப்பு **: 8**

**50 சென்னை நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் பயனடையும் வகையில் கூடைப் பந்து மற்றும் எறி பந்து விளையாட்டுகளில் தங்களை ஈடுபடுத்தி, பயிற்சிகள் மேற்கொள்ள ஏதுவாக அப்பள்ளிகளின் தேவைகளுக்கேற்ப ரூபாய் 60,000/- வீதம் விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட ரூபாய் 30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**9.** நடுநிலைப்பள்ளிகளில் உள்ள விளையாட்டு மைதானங்களை **சமப்படுத்துதல்.**

சென்னை நடுநிலைப்பள்ளிகளில் உள்ள விளையாட்டு மைதானங்களை சமப்படுத்துதல்.

அறிவிப்பு **: 9**

**50 சென்னை** நடுநிலைப்பள்ளிகளில் **உள்ள விளையாட்டு மைதானங்கள் ஒவ்வொன்றும் தலா ரூபாய் 60,000/- என்ற அடிப்படையில் சமப்படுத்தி சீரமைக்க, ரூபாய் 30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**10. மண்டலம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவ மாணவியருக்கு பயணப்படி மற்றும் உணவுப்படி வழங்குதல்.**

சென்னை பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியர்கள் மண்டலம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் போது அவர்களுக்கு பயணப்படி மற்றும் உணவுப்படி வழங்குதல்.

அறிவிப்பு : **10**

**விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவ மாணவியர்களைத் தேர்வு செய்து, அவர்கள் தடகளம் மற்றும் குழுப்போட்டிகளில் மண்டலம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கு பெறும் போது மாணவ மாணவியருக்கு பயணம் மற்றும் உணவுப்படியாக நாள் ஒன்றுக்கு தலா ரூபாய் 500/- வீதம் மொத்தம் 62.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**11. தடகளப் போட்டிகளில் தொடர்ச்சியாக மூன்று முறை பங்கு பெறும் மாணவ மாணவியர்களுக்கு தரமான Sports Shoes வழங்குதல்.**

தடகளப் போட்டிகளில் தொடர்ச்சியாக மூன்று முறை பங்கு பெறும் சென்னை பள்ளி மாணவ மாணவியர்களுக்கு தரமான Sports Shoes வழங்குதல்.

அறிவிப்பு : **11**

**சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் மாணவ மாணவியர்கள், தடகளப் போட்டிகளில் தொடர்ச்சியாக மூன்று முறை பங்கு பெறுபவர்களுக்கு தலா ரூபாய் 2,500/- மதிப்பிலான தரமான Sports Shoes வழங்க ரூபாய் 25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**12. மகளிருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி இலவசமாக வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மகளிருக்கு, சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திடும் வகையில், திறன் மேம்பாட்டுப் பயிற்சி இலவசமாக வழங்குதல்.

அறிவிப்பு : **12**

**மகளிருக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திடும் வகையில், இதற்கென உள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி, (Standard Operating Procedure) திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளான தையல் பயிற்சி, எம்பிராய்டரி, ஆரி வேலைப்பாடுகள் மற்றும் கணினிப் பயிற்சிகள் (Tally) இலவசமாக வழங்கிட, ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு மையம் அமைத்திட, மண்டலம் ஒன்றுக்கு ரூபாய் 50.00 இலட்சம் வீதம் 15 மண்டலங்களுக்கு ரூபாய் 7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**13. மழலையர் பள்ளி வகுப்பறைகளில் மின்னணுப் பலகைகள்** (Display) **நிறுவுதல்.**

சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பயிலும், மழலையர்களின் பாடத்திட்டங்களுக்கேற்ப, அவர்களுக்கென தனியே பதிவு செய்யப்பட்ட பாடங்கள், பாடல்கள் மற்றும் குட்டிக்கதைகளை அக்குழந்தைகளுக்கு திரையில் காண்பிக்கும் விதமாக ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு மின்னணு பலகை (Display) நிறுவுதல்.

அறிவிப்பு : **13**

**சென்னை பள்ளிகளில் 414 மழலையர் வகுப்பறைகள் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மழலையர்களுக்கென தனியே பதிவு செய்யப்பட்ட பாடங்கள், பாடல்கள் மற்றும் குட்டிக்கதைகளை அக்குழந்தைகளுக்கு மின்னணு பலகை** (Display) **வாயிலாக காண்பிக்க ஒவ்வொரு வகுப்பறைக்கும் ரூபாய் 40,000/- வீதம் ரூபாய் 1.66 கோடி மதிப்பில் நிறுவப்படும்.**

**14. உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காட்சி வழியாகப் பாடங்களை விளக்கிட பெரிய அளவிலான மின்னணு பலகைகள் (Display) நிறுவுதல்.**

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காட்சி வழியாகப் பாடங்களை விளக்குவதற்கு பெரிய அளவிலான மின்னணு பலகைகள் (Display) நிறுவுதல்.

**அறிவிப்பு : 14**

**சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காட்சி வழியாக பாடங்களை விளக்குவதால் அம்மாணவர்கள் அதனை எளிதில் புரிந்து கொண்டு, தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெற்றிடும் வகையில் 81 பள்ளிகளுக்கு தலா இரண்டு வீதம் 162 பெரிய அளவிலான மின்னணு பலகைகள் (Display) தலா ரூபாய் 40,000/- மதிப்பீட்டில் வாங்கி நிறுவ ரூபாய் 64.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**15. 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ஆங்கிலப் பேச்சாற்றலை வளர்த்தல்.**

சென்னை பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்கள் அவர்தம் ஆங்கிலப் பேச்சாற்றலை வளர்த்துக்கொள்ளும் பொருட்டு, அவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி Management & Entrepreneurship and Professional Skills Council (MEPSC) என்ற சான்றிதழ் பெற்ற பயிற்சியாளர்களைக் கொண்டு 2025 – 2026 ஆம் கல்வியாண்டில் பயிற்சி வழங்கப்படும்.

**அறிவிப்பு : 15**

**சென்னை பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்கள் அவர்தம் ஆங்கிலப் பேச்சாற்றலை**

**வளர்த்துக்கொள்ளவும், நேர்முகத் தேர்வுகளை எதிர்கொள்ளும் விதமாக அவர்களுக்கு MEPSC சான்றிதழ் பெற்ற பயிற்சியாளர்களின் வாயிலாக வரும் கல்வி ஆண்டில் பயிற்சி வழங்கப்படும். இதற்கென ரூபாய் 20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**16. மழலையர் பள்ளி வகுப்பறைக்கு பல வண்ணங்களில் மேஜை மற்றும் நாற்காலிகள் வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பள்ளிகளில் நடத்தப்பட்டு வரும் மழலையர் வகுப்புகளில் (LKG மற்றும் UKG) குழந்தைகள் மகிழ்ச்சியாக மற்றும் ஆரோக்கியமான சூழலில் கல்வி கற்க ஏதுவாக அவ்வகுப்பறைகளின் சுவற்றில் வர்ணம் பூசுதல், விளக்கப்படங்கள், மரச்சாமான்கள் பொருத்துதல், சுவற்றில் வண்ணப்படங்கள் வரைதல் மற்றும் குழந்தைகள் அமர்வதற்காக பல வண்ணங்களில் வட்ட மேசைகள் மற்றும் நாற்காலிகள் அமைத்துக் கொடுத்தல்.

அறிவிப்பு : **16**

**பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 100 பள்ளிகளில் செயல்பட்டு வரும் மழலையர் வகுப்பறைகளில் (LKG மற்றும் UKG) குழந்தைகள் மகிழ்ச்சியாக மற்றும் ஆரோக்கியமான சூழலில் கல்வி கற்க ஏதுவாக அவ்வகுப்பறைகளின் சுவற்றில் வர்ணம் பூசுதல், விளக்கப்படங்கள், மரச்சாமான்கள் பொருத்துதல், வண்ணப்படங்கள் வரைதல், குழந்தைகள் அமர்வதற்காக பல வண்ணங்களில் வட்ட மேசைகள் மற்றும் நாற்காலிகள் அமைத்துக் கொடுக்க ரூபாய் 3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## பொது சுகாதாரத் துறை

**17. அனைத்து தகன மேடைகளில் மின்னாக்கி** (Generator) **வசதி ஏற்படுத்துதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 201 மயான பூமிகள் பயன்பாட்டில் உள்ளது. இந்த மயான பூமிகளில் 2 இயற்கை எரிவாயு (Bio Gas) தகன மேடைகள், 3 மின்சார தகன மேடைகள் மற்றும் 52 எரிவாயு தகன மேடைகள் (LPG) செயல்பாட்டில் உள்ளது. இந்த தகன மேடைகளில், உடல்களை தகனம் செய்யும் போது மின்சார தடை ஏற்பட்டால் உடல்களை எரிப்பதில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்கும் பொருட்டு அனைத்து மயான பூமிகளிலுள்ள தகன மேடைகளுக்கு மின்னாக்கி (Generator) வசதி ஏற்படுத்துவது அவசியமாகிறது.

**அறிவிப்பு : 17**

**பெருநகர சென்னை மாநகராட்சியில், அனைத்து மயான பூமிகளிலுள்ள தகன மேடைகளுக்கு தடையின்றி மின்சாரம் கிடைக்க ஏதுவாக மின்னாக்கிகள்** (Generator) **ரூபாய் 15.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். மேலும், இவற்றிற்குத் தேவையான எரிபொருள் கொள்முதல் செய்வதுடன் தொடர் பராமரிப்பும் மேற்கொள்ளப்படும்.**

**18. பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகளை பராமரிக்க ஆவண காப்பகம் மேம்படுத்துதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், 1976ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரையிலான பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேடுகள் ரிப்பன் மாளிகையிலும் 1991ஆம் ஆண்டு முதல் மண்டல அலுவலகங்களிலும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. தற்போது, இப்பதிவேடுகள் கணினிமயமாக்கப்பட்டு இணையதளம் வாயிலாக பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றது. எனினும், சட்டப் பூர்வ நடவடிக்கைகளுக்காக பிறப்பு மற்றும் இறப்புப்

படிவங்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இந்த பதிவேடுகள் மற்றும் படிவங்களை ஸ்கேன் செய்வது மற்றும் பாதுகாப்பதற்குத் தேவையான உள்கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

அறிவிப்பு : **18**

**தலைமையகம் மற்றும் 15 மண்டலங்களில் உள்ள பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேடுகள் மற்றும் படிவங்களை ஆவணப்படுத்தி, பாதுகாத்து பராமரிக்க, அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளுடன் பிறப்பு மற்றும் இறப்பு பிரிவுகளை ஆவண காப்பகமாக மேம்படுத்த ரூபாய் 5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**19. ஆரம்ப சுகாதார நிலையங்களில் முதியோர்களுக்கு தனி நலப் பிரிவு அமைத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 140 நகர்ப்புற சுகாதார மற்றும் நல மையங்கள், 16 சமுதாய நல மையங்கள், 1 தொற்று நோய் மருத்துவமனை, 2 பகுப்பாய்வு மையங்கள், 3 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் புளியந்தோப்பில் உள்ள 1 காச நோய் மருத்துவமனை ஆக மொத்தம் 303 சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றது.

இவற்றின் மூலம் தாய் சேய் நல சேவைகள், தொற்று மற்றும் தொற்றா நோய்களுக்கான சிகிச்சை வசதிகள், தடுப்பூசி சேவைகள், அவசரகால சேவைகள் மற்றும் ஆய்வக சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மூட்டு வலி, எலும்பு, தசை சம்மந்தப்பட்ட நோய்கள் மற்றும் மனநலம் சார்ந்த நோய்களுக்கான சிகிச்சை பெற வரும் முதியோர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. ஆகவே, முதியோர்களின் நலன் பேணும் வகையில் முதியோர் நலப் பிரிவுகள் தொடங்குவது அவசியமாகிறது.

**அறிவிப்பு : 19**

**முதியோர்களின் நலன் பேணும் வகையில் முதற்கட்டமாக, வடக்கு வட்டாரத்தில் பி.ஆர்.என் கார்டன், மத்திய வட்டாரத்தில் செம்பியம் மற்றும் தெற்கு வட்டாரத்தில் துரைப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தலா மையத்திற்கு ரூபாய் 30.00 இலட்சம் வீதம் 3 மையத்திற்கு ரூபாய் 90.00 இலட்சம் செலவில் முதியோர்களுக்கென தனிப் பிரிவு புதியதாக தொடங்கப்படும். இப்பிரிவில் ஒரு மருத்துவ ஆலோசகர், ஒரு இயன்முறை சிகிச்சை நிபுணர் மற்றும் இரண்டு உதவியாளர்கள் பணியாற்றுவார்கள்.**

**20. தெருநாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி மற்றும் ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்துதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவும், வெறிநாய்க்கடி நோய் பரவுவதைத் தடுக்கவும் நாய் இனக்கட்டுபாட்டு விதிகள் 2023க்குட்பட்டு தெருக்களில் பிடிக்கப்படும் நாய்களுக்கு இனக்கட்டுபாடு அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்க் கடி தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கீட்டின்படி சென்னையில் சுமார் 1.80 இலட்சம் தெருநாய்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. வெறிநாய்க்கடி நோயைத் தடுக்கும் பொருட்டு அனைத்து தெருநாய்களுக்கும் வெறிநாய்க்கடி தடுப்பூசி போடுவது அவசியமாகிறது.

**அறிவிப்பு : 20**

**பெருநகர சென்னை மாநகராட்சியில், தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம் மற்றும் விலங்குகள் நல ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் ரூபாய் 3.00 கோடி செலவில் 1.80 லட்சம் தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி மற்றும் ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தப்படும்.**

## 21. மருந்து காப்பக அறைகளில் குளிரூட்டு (AC) வசதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில், பொது சுகாதாரத் துறையின் கீழ் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் 140 நகர்ப்புற சுகாதார மற்றும் நல மையங்கள் செயல்படுகின்றன. இந்த சுகாதார மையங்களின் மூலம் தாய் சேய் நல சேவைகள், தொற்று மற்றும் தொற்றா நோய்களுக்கான சிகிச்சை வசதிகள், தடுப்பூசி சேவைகள், அவசரகால சேவைகள் மற்றும் ஆய்வக சேவைகள் தொடர் மருத்துவ சிகிச்சை, அவசரகால சிகிச்சை ஆகிய முழுமையான சுகாதார சேவைகள் வழங்கி வருகின்றது. இந்த மருத்துவமனைக்கு வரும் அனைத்து நோயாளிகளுக்கும் மருந்துகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன. இந்த மருந்துகள் குறிப்பிட்ட வெப்பநிலையில் பாதுகாக்கப்பட வேண்டும். தற்போது, மாறிவரும் பருவ நிலை மற்றும் உயர் வெப்ப நிலை காரணமாக இந்த மருந்துகள் வைக்கப்பட்டுள்ள அறைகள் குளிரூட்டப்பட வேண்டியது அவசியமாகிறது.

அறிவிப்பு: 21

**பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து சுகாதார நிலையங்களில் உள்ள மருந்து காப்பக அறைகளின் அளவுக்கு ஏற்ற வகையில் குளிரூட்டு (AC) வசதிகள் செய்ய ரூபாய் 3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 22. சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய கட்டடம் கட்டுதல்.

மண்டலம் 5, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மாநகர ஆரம்ப சுகாதார நிலையம் சிதிலமடைந்து உள்ளதால், அதனை இடித்துவிட்டு அவ்விடத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய கட்டடம், கட்டப்பட வேண்டியுள்ளது.

**அறிவிப்பு : 22**

**சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மாநகர ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவாக்கம் செய்யும் பொருட்டு ரூபாய் 2.50 கோடி செலவில் பொது மக்கள் பயன் பெறும் வகையில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும்.**

**23. ஆரம்ப சுகாதார நிலையங்களில் மின் தூக்கி (Lift) வசதி அமைத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 22 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதியதாக கட்டப்பட்டுள்ளன. பொதுமக்கள் வசதிக்காக இந்த 22 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மின்தூக்கி (Lift) வசதிகள் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

**அறிவிப்பு : 23**

**பொது மக்கள் பயன்பாட்டிற்காக பெருநகர சென்னை மாநகராட்சியில், புதியதாக கட்டப்பட்டுள்ள 22 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்களில் மின்தூக்கி (Lift) வசதிகள் ஏற்படுத்திட ரூபாய் 5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**24. வளர்ப்புப்பிராணிகளுக்கான மருத்துவமனை ஏற்படுத்துதல்.**

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில், திரு.வி.க நகர், நுங்கம்பாக்கம். கண்ணாம்மாபேட்டை, மீனம்பாக்கம், புளியந்தோப்பு மற்றும் லாயிட்ஸ் காலனி ஆகிய 6 இடங்களில் செல்லப் பிராணிகளுக்கு அனைத்து அடிப்படை சிகிச்சைகளும் அளிக்கப்படுகிறது. வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசிகள் இலவசமாக போடப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து மண்டலங்களிலும் செல்லப் பிராணிகளின் நலனைக் கருத்தில் கொண்டு செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்கள் கூடுதலாக அமைக்கப்பட உள்ளது.

அறிவிப்பு : 24

**மண்டலம் 1, 2, 3, 4, 5, 7, 8, 11, 13 மற்றும் 14 ஆகிய பத்து மண்டலங்களில் தற்போது புதியதாக கட்டப்பட்டு வரும் நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்களில் கூடுதலாக வளர்ப்புப் பிராணிகளுக்கான மருத்துவமனைகள் ரூபாய் 15.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

**25. செல்லப்பிராணிகளுக்கு சிறப்பு அவசர சிகிச்சை மையம் அமைத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், 6 இடங்களில் செல்லப் பிராணிகளுக்கு மருத்துவம் செய்ய மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது தேவைகளை கருதி விபத்துகளினால் காயமடைந்த செல்லப்பிராணிகளுக்கு அவசர சிகிச்சை **(Pet Animal Trauma Care Centre)** அளிப்பதற்கான சிறப்பு சிகிச்சை மையம் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

அறிவிப்பு : 25

**மண்டலம் 10, கோட்டம் 141 கண்ணம்மாபேட்டையில் இயங்கி வரும் செல்லப்பிராணிகள் மருத்துவமனை வளாகத்தில், விபத்துகளினால் காயமடைந்த செல்லப்பிராணிகளுக்கு சிறப்பு அவசர சிகிச்சை மையம் ரூபாய் 25.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**26. வட சென்னையில் செல்லப்பிராணிகளுக்கு மயான பூமி வசதி ஏற்படுத்துதல்.**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது கண்ணாம்மாபேட்டை மற்றும் மைலாப்பூர் மயான பூமிகளில் இறந்த செல்லப்பிராணிகளை அடக்கம் செய்யும் வசதிகள் உள்ளது. மேலும், தேவைகளுக்கேற்ப இறந்த செல்லப்பிராணிகளை அடக்கம் செய்ய கூடுதலாக மயான பூமி அமைக்க வேண்டியது அவசியமாகிறது.**

அறிவிப்பு : **26**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வட சென்னையில் மூலக்கொத்தளம் மயான பூமியில், இறந்த செல்லப்பிராணிகளை அடக்கம் செய்ய வசதிகள் ஏற்படுத்தப்படும்.**

## மருத்துவ சேவைகள் துறை

**27. மகப்பேறு மருத்துவமனைகளுக்கு கிருமி நாசினி புகைக்கருவிகள் வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மகப்பேறு மருத்துவமனைகளிலுள்ள அறுவை அரங்குகளில் கிருமி நீக்கம் செய்யும் பொருட்டு அரங்குகள் Sterilise செய்வதற்காக கிருமிநாசினி புகைக்கருவிகள் (Fogger Machine) வழங்குவது மிகவும் அவசியமாகிறது.

அறிவிப்பு : **27**

**பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் 16 நகர்ப்புர சமுதாய நல மையங்கள் மற்றும் 24 மணி நேரமும் செயல்படும் 3 மகப்பேறு மருத்துவமனைகள் என 19 மருத்துவமனைகளுக்கும் தலா ஒன்று வீதம் 19 கிருமிநாசினி புகைக்கருவிகள் (**Fogger Machine) **தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்திடமிருந்து (TNMSC) ரூபாய் 10.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**28. நகர்ப்புற சமுதாய நல மையங்கள் மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளுக்கு மின் அதிர்வலைகள் மூலம் சீரற்ற இதயத் துடிப்பை சீராக்க உதவும் கருவிகள் வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில், அனுமதிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அவசரகாலங்களில் அனுமதிக்கப்படும் இதய துடிப்பு குறைபாடுள்ளவர்களை மாரடைப்பிலிருந்து காக்க இதயத் துடிப்பை சீராக்க உதவும் கருவிகளை வாங்குவது மிகவும் அவசியமாகிறது.

**அறிவிப்பு : 28**

**பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் 16 நகர்ப்புற சமுதாய நல மையங்கள் (UCHC) மற்றும் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய 3 மகப்பேறு மருத்துவமனைகளுக்கு, மின் அதிர்வலைகள் மூலம் சீரற்ற இதயத் துடிப்பை சீராக்க உதவும் கருவிகள் (Defibrillator) மருத்துவமனைக்கு ஒன்று வீதம் 19 கருவிகள் தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்திடமிருந்து (TNMSC) ரூபாய் 51.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**29. மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஊட்டச்சத்து பெட்டகங்கள் சேமிக்க மண்டலம் 6, அம்பாள் நகரில் தரை தளம் மற்றும் இரண்டு அடுக்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் அயனாவரம் நகர்ப்புர சுகாதார மையத்தில், அனைத்து மருத்துவ மையங்களுக்குத் தேவையான மருந்துகள், தடுப்பூசிகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை பாதுகாப்பாக சேமித்து வைக்கும் கிடங்காக உபயோகப்படுத்தப்பட்டு வரும் கட்டடம் விரைவில் இடிக்கப்பட உள்ளது. எனவே, மண்டலம் 6 வார்டு 75, ஏ.கே சாமி தெருவில் பயன்பாட்டில் இல்லாத அம்பாள் நகர் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தினை இடித்துவிட்டு, அவ்விடத்தில், சென்னை மாநகராட்சியின் மருத்துவ சேவைகள் துறைக்குத் தேவையான மருந்து கிடங்கு மற்றும் மாவட்ட தடுப்பூசி பண்டக சாலையாக அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டுதல் அவசியமாகிறது.

**அறிவிப்பு : 29**

**15 மருத்துவ மண்டலங்களில் இயங்கும் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள் (UPHC), 16 நகர்ப்புற சமுதாய நல மையங்கள் (UCHC) மற்றும் 3 எண்ணிக்கையிலான 24 மணி நேர மகப்பேறு மையங்களுக்குத் (EOC) தேவைப்படும், மருத்துவ உபகரணங்கள், குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்துகள் ஆகியவற்றினை குளிரூட்டப்பட்ட**

**நிலையில் பராமரிக்கவும், ஊட்டச்சத்து பெட்டகங்கள் (Nutrition Kits) மற்றும் மருத்துவமனைகளுக்குத் தேவையான அனைத்து மருத்துவப் பொருட்களை சேமிக்கவும் மற்றும் அப்பொருட்கள் சார்ந்த பதிவேடுகளைப் பராமரிக்க ஏதுவாக, மண்டலம் 6, வார்டு 75, அம்பாள் நகர், ஏ.கே. சாமி தெருவில் பயன்பாட்டில் இல்லாத நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தினை இடித்துவிட்டு அவ்விடத்தில், 2000 சதுர அடி பரப்பளவில் மின்தூக்கி (Lift), சாய்தளம், மின்னாக்கி (Generator) மற்றும் குளிரூட்டு (AC) வசதியுடன் கூடிய தரைதளம் மற்றும் இரண்டு அடுக்கு கட்டடம் கட்ட ரூபாய் 2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## இயந்திரப் பொறியியல் துறை

**30. போக்குவரத்திற்கு இடையூறின்றி சாலைகளை சுத்தம் செய்யும் வகையில் சிறிய அளவிலான புதிய வாகனங்கள் கொள்முதல் செய்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து சாலை ஓரங்களிலும், தடுப்புச் சுவரின் ஓரங்களிலும் படிந்துள்ள மண் துகள்கள் மற்றும் குப்பைகளைப் பெருக்கி உறிஞ்சியெடுத்து சுத்தம் செய்வதற்கு, சிறிய அளவிலான வாகனங்கள் கொள்முதல் செய்வது அவசியமாகிறது.

அறிவிப்பு : **30**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் உட்புறச் சாலைகள் உள்ளிட்ட அனைத்து சாலைகளின் ஓரங்களில் படிந்துள்ள மண் துகள்கள் மற்றும் குப்பைகளை போக்குவரத்திற்கு இடையூறின்றி பெருக்கி, உறிஞ்சியெடுத்து சுத்தம் செய்யக்கூடிய வாகனம் (Ride on sweeping cum suction vehicle) ரூபாய் 40.00 இலட்சம் மதிப்பீட்டில் 20 வாகனங்கள் கொள்முதல் செய்ய ரூபாய் 8.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**31.** **காற்று மாசினை கட்டுப்படுத்தும் வகையில் இயற்கை எரிவாயு (CNG) மற்றும் மின்சாரம் (EV) மூலம் இயங்கும் வாகனங்களாக மாற்றுதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணி உள்ளிட்ட இதர பணிகளுக்காக பராமரிக்கப்பட்டு வரும் டீசல் மற்றும் பெட்ரோல் மூலம் இயங்கும் வாகனங்களால் உண்டாகின்ற காற்று மாசினை கட்டுப்படுத்தும் பொருட்டு இயற்கை எரிவாயு (CNG) மற்றும் மின்சாரம் (EV) மூலம் இயங்கும் வாகனங்களாக மாற்றுதல்.

**அறிவிப்பு : 31**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வரும் டீசல் மற்றும் பெட்ரோல் வாகனங்களினால் ஏற்படும் காற்று மாசினை கட்டுப்படுத்தும் விதமாக, அவ்வாகனங்கள் படிப்படியாக இயற்கை எரிவாயு (CNG) மற்றும் மின்சாரம் (EV) மூலம் இயங்கும் வாகனங்களாக மாற்றம் செய்யப்படும்.**

## வருவாய்த் துறை

**32.** **புதியதாக வரி செலுத்துவோருக்கு QR Code வசதி ஏற்படுத்துதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, பொதுமக்கள் எளிய வழியில் வரி செலுத்துவதற்கு ஏதுவாக பல்வேறு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில், தற்போது கூடுதலாக **QR Code** வசதி ஏற்படுத்தித் தருதல்.

**அறிவிப்பு : 32**

**சொத்து வரி மதிப்பீடு, பெயர் மாற்றம் திருத்தத்திற்கான இறுதி ஆணை அறிவிப்பு, புதிய மற்றும் புதுப்பிக்கும் தொழில் உரிமங்கள், தொழில் வரி வழங்கும் அறிவிப்புகளுக்கு புதிதாக QR Code வசதி ஏற்படுத்தப்படும். இதனால், எவ்வித சிரமும் இன்றி உடனடியாக வரிகளை செலுத்த இயலும்.**

**33. எளிதில் வரி செலுத்த ஏதுவாக QR Code அச்சிட்ட அட்டைகள் பொருத்துதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, பொதுமக்கள் மற்றும் வணிகர்களால் செலுத்துப்படும் பல்வேறு வரிகளை, சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகங்களிலும் செலுத்தும் வகையில் வழிவகை செய்தல்.

**அறிவிப்பு : 33**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து மண்டல அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள், வார்டு அலுவலகங்கள் மற்றும் சேவைத் துறைகளான சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அலுவலகங்கள், தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகங்கள் மற்றும் அரசு இ-சேவை மையங்கள் ஆகிய இடங்களில் எளிதாக வரி செலுத்துவதற்கு ஏதுவாக QR Code அச்சிட்ட அட்டைகள் பொருத்தப்படும்.**

**34. வணிக வளாக வாடகைதாரர்கள் எளிதாக வாடகை செலுத்த வசதி ஏற்படுத்துதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்களிலுள்ள வாடகைதாரர்கள் தங்களது வாடகைத் தொகையினை இணையதளம் (Online) வழியாக செலுத்தும் வசதி ஏற்படுத்தப்படும்.

**அறிவிப்பு : 34**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகத்தில் வாடகைக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடைகளின் ஒவ்வொரு வாடகைதாரருக்கும் தனித்தனியாக வாடகை மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) செலுத்துவதற்கு ஏதுவாக QR Code அச்சிட்ட அட்டைகள் அந்தந்த கடைகளில் பொருத்தப்படும். இதனைப் பயன்படுத்தி வாடகைதாரர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் வாயிலாக உரிய வாடகையை நேரடியாக காலதாமதமின்றி செலுத்தும் வசதி ஏற்படுத்தப்படும்.**

**35. மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் உணவு விற்பனை மண்டலங்கள் (Food Court) அமைத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உணவு விற்பனை மண்டலங்கள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து உணவு விற்பனை மண்டலங்கள் (Food Court) அமைக்கப்படும்.

**அறிவிப்பு : 35**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் பொதுமக்களுக்கு, அடிப்படை வசதிகளுடன் சுகாதாரமான சூழ்நிலை கொண்ட உணவு விற்பனை மண்டலங்கள் (Food Court) ஏற்படுத்திடும் வகையில், முதற்கட்டமாக வரும் நிதி ஆண்டில் இரண்டு இடங்களில் செயல்படுத்தப்படும்.**

## பேருந்து சாலைகள் துறை

**36. புதிய பேருந்து நிழற்குடைகள் அமைத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தமுள்ள பேருந்து நிறுத்தங்கள் குறித்து CUMTA நிறுவனத்தால் கணக்கெடுப்பு செய்யப்பட்டதில், சுமார் 2000 பேருந்து நிறுத்தங்கள் இருப்பதாக தெரியவந்துள்ளது. இதில் முக்கிய பேருந்து வழித்தடங்களில் நிழற்குடை இல்லாத 200 எண்ணிக்கையிலான பேருந்து நிறுத்தத்தில் புதியதாக நிழற்குடைகளை அமைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 2025 – 2026ஆம் நிதியாண்டில் புதிய பேருந்து நிழற்குடைகள் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அறிவிப்பு : **36**

**பெருநகர சென்னை மாநகராட்சியில், 200 எண்ணிக்கையிலான புதிய பேருந்து நிழற்குடைகள் சுமார் ரூபாய் 30.00 கோடி செலவில் அமைக்கப்படும்.**

**37. சென்னையில் மூன்று இடங்களில் ஏற்கனவே உள்ள பேருந்து நிறுத்தங்களை தரம் உயர்த்தி மேம்படுத்துதல்.**

ஈக்காட்டுத்தாங்கல், மேற்கு சைதாப்பேட்டை மற்றும் கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலை ஆகிய சாலைகளில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை மூலம் அமைக்கப்பட்டிருந்த பேருந்து நிறுத்தங்களை தரம் உயர்த்தி இழுவிசை கூரையாக (Tensile Roof) மாற்றியமைக்கப்படும்.

அறிவிப்பு : **37**

**ஈக்காட்டுத்தாங்கல், மேற்கு சைதாப்பேட்டை மற்றும் கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலை ஆகிய இடங்களில் ஆஸ்பெஸ்டாஸ் கூரையாக அமைந்துள்ள பேருந்து நிறுத்தங்களை தரம் உயர்த்தி இழுவிசை கூரையாக (Tensile Roof) மேம்படுத்திட ரூபாய் 4.47 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**38. வடக்கு மற்றும் மத்திய வட்டாரத்தில் நான்கு இடங்களில் அமைந்துள்ள பேருந்து முனையங்களை மேம்படுத்துதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட **மணலி** (மண்டலம் 2 வார்டு 21), **IOCL** (மண்டலம் 4, வார்டு 38), **டோல்கேட்** (மண்டலம் 4 வார்டு 39) மற்றும் **சாலிகிராமம்** (மண்டலம் 10 வார்டு 128) ஆகிய நான்கு இடங்களில் அமைந்துள்ள பேருந்து முனையத்தில் அடிப்படை வசதிகளை தரம் உயர்த்தி இழுவிசை கூரை (Tensile Roof) மற்றும் கான்கிரீட் தளத்துடன் அமைப்பது, தாய்மார்கள் பாலூட்டும் அறை, ஓட்டுநர் மற்றும் நடத்துனர் ஓய்வு அறை, பயணச்சீட்டு வழங்கும் அறை, கழிப்பறை வசதிகள் மற்றும் இதர அடிப்படை வசதிகளுடன் கூடிய பேருந்து முனையம் மேம்படுத்தும் பணி.

அறிவிப்பு : 38

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட <u>மணலி</u> (மண்டலம்-2 வார்டு 21), <u>IOCL</u> (மண்டலம் 4 வார்டு 38), <u>டோல்கேட்</u> (மண்டலம் 4 வார்டு 39) மற்றும் <u>சாலிகிராமம்</u> (மண்டலம் 10 வார்டு 128) ஆகிய நான்கு இடங்களில் அமைந்துள்ள பேருந்து முனையங்கள் ரூபாய் 16.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

## பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்கள் துறை

### 39. விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தி புதிய உபகரணங்கள் அமைத்தல்.

சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் புதிய உபகரணங்களை அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அறிவிப்பு : 39

**விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறுவதற்கு ஏதுவாக விளையாட்டுத்திடல்களை மேம்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். எனவே பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 150 விளையாட்டுத் திடல்களில், ரூபாய் 20.00 கோடி மதிப்பீட்டில் புதிய விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்படும்.**

### 40. விளையாட்டுத் திடல்களில் தற்காலிக பாதுகாவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பெரிய அளவிலான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டுத் திடல்களுக்கு ஒப்பந்த முறையில் தற்காலிக பாதுகாவலர்கள் பணியமர்த்துதல்.

அறிவிப்பு : 40

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பெரிய அளிவிலான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த 171 எண்ணிக்கையிலான விளையாட்டு திடல்களில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக பாதுகாவலர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இதற்கென ரூபாய் 5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**41. பூங்காக்களில் புத்தக வாசிப்பு மண்டலங்கள் (Reading Zone) ஏற்படுத்துதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பூங்காக்களில் புத்தகம் வாசிப்பதற்கு ஏற்ற இடங்களைத் தேர்வு செய்து, அவ்விடத்தில் கூரை அமைத்து இருக்கை வசதியுடன் கூடிய வாசிப்பு மண்டலங்கள் (Reading zone) அமைக்கப்படும்.

அறிவிப்பு : 41

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பூங்காக்களில் மக்கள் அதிகமாக பயன்படுத்தும் 70 எண்ணிக்கையிலான பூங்காக்களில் பொதுமக்கள் பயன் பெறும் வகையில், பூங்காவின் ஒரு பகுதியில் கூரை அமைத்து இருக்கை வசதியுடன் கூடிய புத்தகம் வாசிப்பு மண்டலங்கள் (Reading zone) ரூபாய் 2.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**42. சாலை மைய தடுப்புகள், சாலை மைய தீவுத்திட்டுகளை அழகுபடுத்தி, பராமரித்தல்.**

அறிவிப்பு : 42

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சாலை மைய தடுப்புகள் மற்றும் சாலை மைய தீவுத் திட்டுகளை அழகுபடுத்த, முதற்கட்டமாக 25 கிலோ மீட்டர் நீளத்திற்கு மண் மற்றும் உரம் இடுதல் மற்றும் பல்வேறு வகையான அலங்காரப்**

**பூச்செடிகள் நடவு செய்து அதனைப் பாதுகாக்கும் வகையில், துருப்பிடிக்காத இரும்பிலான கைப்பிடி (Stainless Steel Hand Rail) அமைக்க ரூபாய் 18.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 43. பூங்காக்கள் பழுது பார்க்கும் பணி மற்றும் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பூங்காக்களை பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்துதல் அவசியமாகிறது.

**அறிவிப்பு : 43**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 300 பூங்காக்களை பொது மக்கள் அதிகம் பயன்படுத்திடும் வகையில், பூங்காக்கள் பழுது பார்க்கும் பணிகளுக்காகவும் மற்றும் மேம்படுத்தும் பணிகளுக்காகவும் ரூபாய் 43.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 44. பெற்றோருடன் வரும் சிறப்பு குழந்தைகள் உபயோகிக்கும் வகையில் சிறப்பம்சம் கொண்ட பூங்காக்களாக மேம்படுத்துதல்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் அதிகம் கூடும் பெரிய பூங்காக்களில், அனைத்து வகையான பார்வையாளர்களுக்கும், முக்கியமாக சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய சிறப்பு அம்சங்களுடன் பூங்காக்கள் மேம்படுத்துதல்.

**அறிவிப்பு : 44**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் 10 பெரிய பூங்காக்களைத் தேர்வு செய்து அனைத்து வகையான பார்வையாளர்களும், முக்கியமாக பெற்றோருடன் வரும் சிறப்பு குழந்தைகள் உபயோகிக்கும் வகையிலான உபகரணங்கள் உள்ளடக்கிய சிறப்பு அம்சங்கள் கொண்ட பூங்காக்களாக மேம்படுத்திட ரூபாய் 3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

| வரிசை எண். | இடம் |
|---|---|
| **1** | மண்டலம் 2, வார்டு 19, MMDA பூங்கா |
| **2** | மண்டலம் 3, வார்டு 28, KKR முதல் பிரதான சாலை பூங்கா |
| **3** | மண்டலம் 4, வார்டு 36, வாசுகி நகர் பூங்கா |
| **4** | மண்டலம் 5, வார்டு 52, அண்ணா பூங்கா |
| **5** | மண்டலம் 6, வார்டு 71, முரசொலி மாறன் பூங்கா |
| **6** | மண்டலம் 8,வார்டு 102, அண்ணா நகர் போகன் வில்லா பூங்கா |
| **7** | மண்டலம் 10, வார்டு 133, டாக்டர் நடேசன் பூங்கா, |
| **8** | மண்டலம் 12, வார்டு 156, திருவள்ளுவர் நகர், நாதமுனி தெரு பூங்கா |
| **9** | மண்டலம் 14, வார்டு 191, ஜெயச்சந்திரன் நகர் பூங்கா |
| **10** | மண்டலம் 15, வார்டு 193, ஸ்ரீசாய் நகர் பூங்கா |

**45. வட சென்னையில் புதியதாக 2 இறகுப் பந்து உள்விளையாட்டரங்கம் அமைத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வடசென்னைப் பகுதி வாழ் இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் மண்டலம் 2ல் புதியதாக 2 இறகுப் பந்து உள்விளையாட்டரங்கம் அமைக்கப்படும்.

**அறிவிப்பு : 45**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வடசென்னைப் பகுதி வாழ் இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் மண்டலம்-2, வார்டு 16ல் ஆண்டார் குப்பம் - ஏலந்தனூர், சடையன்குப்பம் - பர்மா நகர் ஆகிய இரண்டு இடங்களில் புதியதாக இறகுப் பந்து உள்விளையாட்டரங்கம் அமைக்க ரூபாய் 2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**46. மின் ஒளியுடன் கூடிய செயற்கை நீரூற்றுகள் அமைத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியை அழகுறச் செய்யும் வகையில் நுழைவாயில்கள் மற்றும் சாலை சந்திப்புகளில் மின் ஒளியுடன் கூடிய செயற்கை நீரூற்று அமைத்தல்.

அறிவிப்பு : 46

**பெருநகர சென்னை மாநகராட்சி நுழைவாயில்கள் மற்றும் முக்கிய சந்திப்புகளில் 10 இடங்களைத் தேர்வு செய்து, அங்கு மின் ஒளியுடன் கூடிய செயற்கை நீருற்றுகள் ரூபாய் 5.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**47. பூங்காக்களில் தரமான மற்றும் சுகாதாரமான உணவு மையம் துவங்குதல்**

பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காக்களுக்கு நடைபயிற்சி மற்றும் பொழுதுபோக்கிற்காக வரும் பொதுமக்கள் தங்கள் களைப்பினை போக்கி புத்துணர்வு பெறும் வகையில் பூங்காக்களில் சுய உதவிக் குழுக்களால் தரமான மற்றும் சுகாதாரமான உணவு விற்பனை மையங்கள் அமைக்கப்படுதல்.

அறிவிப்பு : 47

**பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காக்களுக்கு நடைபயிற்சி மற்றும் பொழுதுபோக்கிற்காக வரும் பொதுமக்கள், தங்கள் களைப்பினைப் போக்கி புத்துணர்வு பெறும் வகையில், பூங்காக்களில் சுய உதவிக் குழுக்களால் தரமான மற்றும் சுகாதாரமான உணவு மையங்கள் அமைக்கப்படும்.**

## திடக்கழிவு மேலாண்மைத் துறை

**48. ஐம்பது மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட உரம் தயாரிக்கும் கூடம் அமைத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி தெற்கு வட்டாரப் பகுதியில் 2 எண்ணிக்கையிலான தலா 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட, காற்று புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் கூடம் அமைத்தல்.

அறிவிப்பு : **48**

**பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் அகழ்ந்தெடுக்கும் பணி (Bio Mining) மூலம் மீட்டெடுத்த நிலத்தில், இரண்டு ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில், 2 எண்ணிக்கையில், ஒவ்வொன்றும் தலா 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட காற்று புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் கூடம் (Windrow Compost Plant) ரூபாய் 14.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**49.** பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் **1, 3, 4, 8, 9, 10, 11, 12, 13** மற்றும் **15**ல் நெகிழி சிப்பமாக்கல் மையங்களை **(Plastic Baling Centre)** அமைத்தல்.

அறிவிப்பு : **49**

**குப்பை கொட்டும் வளாகத்தில் நெகிழிகளை கொட்டுவதைத் தவிர்க்க ஏற்கனவே, ஐந்து மண்டலங்களில் தலா 10 மெட்ரிக் டன் திறன் கொண்ட நெகிழி சிப்பமாக்கல் மையங்கள் (Plastic Baling Centre) இயங்கி வருகின்றன. மேலும், இப்பணிகள் இதர 10 மண்டலங்களில் (மண்டலம்1,3,4,8,9,10,11,12,13 மற்றும் 15) தலா 10 மெட்ரிக் டன் திறன் கொண்ட நெகிழி சிப்பமாக்கல் மையங்கள் ரூபாய் 22.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

## சிறப்புத் திட்டங்கள் துறை

**50. மேம்பாலங்களின் கீழ்ப்பகுதியினை அழகுபடுத்துதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பாலங்கள் துறையால் 14 மேம்பாலங்கள் மற்றும் 13 இரயில்வே மேம்பாலங்கள் சீரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேம்பாலங்களின் கீழ் பகுதிகளில் குப்பைகள் சேரா வண்ணமும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறும் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

**அறிவிப்பு : 50**

**மேம்பாலங்கள் மற்றும் இரயில்வே மேம்பாலங்களின் கீழ்ப்பகுதியினை உகந்த முறையில் அழகுபடுத்திட ரூபாய் 42.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## கட்டடத் துறை

**51. நீத்தார் உடல் பாதுகாப்பு மையங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8 வேலங்காடு மயான பூமியில் நீத்தார் உடல் பாதுகாப்பு மையம் தற்போது செயல்பட்டு வருகிறது. இறந்தோரின் உறவினர்கள் வெளியூர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வரும் வரையில் உடல்கள் தற்காலிகமாக குளிரூட்டப்பட்ட அறைகளில் வைத்து தனியார் பங்களிப்புடன் (PPP-Mode) பாதுகாக்கப்பட்டு வருகிறது. இது போன்ற மையங்கள் தனியார் பங்களிப்புடன் (PPP-Mode) வடக்கு வட்டாரத்தில் மூலக்கொத்தளம் மயான பூமியிலும் மற்றும் தெற்கு வட்டாரத்தில் பெசன்ட் நகர் மயான பூமியிலும் செயல்படுத்துதல்.

அறிவிப்பு : **51**

**நீத்தார் உடல் பாதுகாப்பு மையம் தனியார் பங்களிப்புடன் (PPP-Mode) வேலங்காடு மயான பூமியில் தற்போது செயல்பட்டு வருவதைப் போன்று, வடக்கு வட்டாரத்தில் மூலக்கொத்தளம் மயான பூமியிலும் மற்றும் தெற்கு வட்டாரத்தில் பெசன்ட் நகர் மயான பூமியிலும் PPP-Mode முறையில் செயல்படுத்தப்படும்.**

## மின்துறை

**52. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மின்னாக்கி (Generator) வசதி ஏற்படுத்துதல்.**

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், மின்தடை ஏற்படும் நேரங்களில் மாணவ மாணவியர்களின் கல்வி தடைபடாமல் இருக்க மின்னாக்கி **(Generator)** அமைப்பது அவசியமாகிறது.

அறிவிப்பு : **52**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் செயல்படும், 52 சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு, மின்னாக்கி (Generator) ரூபாய் 4.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**53. வாகனப் போக்குவரத்து சுரங்கப் பாதைகளில் வெள்ளத் தடுப்பு முன்னேற்பாடு அழகுபடுத்துதல் மற்றும் மின் வசதிகள் அமைத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 18 வாகனப் போக்குவரத்து சுரங்கப்பாதைகளில் மழைக்காலங்களில் போக்குவரத்து தடைபடாமல் இருக்கவும், தேங்கும் மழைநீரினை உடனுக்குடன் அகற்றவும், புதிய டீசல் மோட்டார்கள், மின் மோட்டார்கள், மின்னாக்கி (Generator) மற்றும் மின் வசதிகள் அமைப்பது அவசியமாகிறது.

அறிவிப்பு : **53**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 18 இடங்களில் உள்ள வாகனப் போக்குவரத்து சுரங்கப்பாதைகளில், மழைநீரை உடனுக்குடன் அகற்றுவதற்கு, புதிய டீசல் மோட்டார்கள், மின்மோட்டார்கள், மின்னாக்கி (Generator) அமைக்கப்படும். மேலும், சுரங்கப்பாதைகளில் வர்ணங்கள் பூசப்பட்டு வண்ணமிகு வரைபடங்கள் வரைந்து மின் விளக்குகளால் அழகுபடுத்தும் பணிகளுக்காக ரூபாய் 14.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## தகவல் தொழில்நுட்பம்

### 54. வாட்ஸ்அப் (WhatsApp) வாயிலாக பொதுமக்களுக்கு சேவைகள் வழங்குதல்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு பணிகள் நடைபெறுகிறது. இப்பணிகளை செய்யும் அலுவலர்கள் செயல்திறன் மிக்க வகையில் செயல்படவும், பொது மக்களுக்கு பல்வேறு சேவைகளை விரைவாகவும், எளிதாக அணுகக்கூடிய வகையிலும் வழங்குவதில் மாநகராட்சி பல முக்கியமான சவால்களை எதிர்கொள்கின்றது. தற்போது பயன்பாட்டில் உள்ள இணையதளங்கள் மற்றும் மொபைல் செயலிகளை பயன்படுத்துவோர் மிகுந்த சிரமம் அடைகிறார்கள். உலகளவில் மிகப் பெரிய பயனர் அடிப்படையைக் கொண்டுள்ள வாட்ஸ்அப் (WhatsApp) பயன்பாட்டு தளத்தைப் பயன்படுத்தி, இந்த இடைவெளியை நிரப்புவதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி, ஒரு நவீன மற்றும் திறன்வாய்ந்த சேவைகளை செயல்படுத்தி அதற்கான தீர்வை வழங்க முடியும். திறன்வாய்ந்த சேவைகள் கீழ்காணும் நான்கு முக்கிய தொகுதிகளின் அடிப்படையில் உருவாக்கப்படும்.

1. பொதுமக்கள் சேவைகள் (Citizen Services)
2. பொதுவான கேள்விகள் மற்றும் பதில்கள் (FAQ Automation)
3. பொதுமக்களின் புகாரினை கையாளுதல் (Public Grievance Handling)
4. முகவர் சேவைகள் (Agent Services)

**அறிவிப்பு : 54**

**பொதுமக்களுக்கு பல்வேறு சேவைகளை விரைவாகவும் எளிதாகவும் வழங்குவதற்கு வாட்ஸ்அப் (WhatsApp) அடிப்படையிலான தகவல் தொடர்புகளை உருவாக்கிட, ரூபாய் 4.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC)

**55. பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு மையத்தில் புதியதாக விரிவாக்கப்பட்ட திரை அமைத்தல்.**

ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC) ஏற்கனவே, ரிப்பன் கட்டடத்தில் செயல்பட்ட போது பொருத்தப்பட்ட Video Wall 5 வருடங்களாக செயல்பட்டதை, தற்போது முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி மாளிகையில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் பொருத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திரையை மேப்படுத்தப்பட்ட பெரிய அளவிலான Video Wallஆக மாற்றியமைப்பதால், சுரங்கப்பாதைகள், கால்வாய்கள், திடக்கழிவு கொட்டும் இடங்கள், மற்றும் வெள்ளம் ஏற்படும் இடங்களில் நடக்கும் நிகழ்நேரக் கண்காணிப்புப் பணியை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதன் மூலம் அவசர காலம் மற்றும் பேரிடர் காலங்களில் துல்லியமான முறையில் தகவல்களை அறிந்து கொண்டு துரிதமாக நடவடிக்கை எடுக்க இயலும்.

**அறிவிப்பு : 55**

**முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி மாளிகையில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் விரிவாக்கப்பட்ட புதிய Video Wall திரை அமைக்கப்படும். இதற்கென ரூபாய் 2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**56. டிஜிட்டல் முறையில் ஸ்மார்ட் பார்க்கிங் வசதி ஏற்படுத்துதல்.**

சென்னை வளர்ந்து வரும் மாநகரமாக உயர்ந்துள்ளது. மிகை அளவிலான வணிக நிறுவனங்கள், கடைகள் பெருகிவருவதால், பொதுமக்கள் தங்கள் வாகனங்களை போக்குவரத்து நெரிசல் இல்லாத இடத்தை கண்டறிவதில் சிரமம் ஏற்படுகிறது. இதனால் பேருந்து வழித்தடங்கள், நடைபாதைகள் ஆகிய இடங்களில் வாகனங்கள் நிறுத்துமிடமாக உபயோகப்படுத்தப்படுகிறது. இதனால், போக்குவரத்து நெரிசலும், பாதசாரிகளுக்கு நடந்து செல்வதில் சிரமமும், பாதுகாப்பின்மையும் ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க சாலையோரங்களில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படாமல் வாகன நிறுத்துமிடத்தை (Smart Parking) கண்டறிவதற்கு செயலி ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதனை பொது மற்றும் தனியார் பங்குதாரர்கள் **(**Public Private Partnership**)** முறையில் செயல்படுத்தி, பொதுமக்களுக்கு பாதுகாப்பான வாகன நிறுத்துமிடத்தை அறிந்து கொள்ளவும், முன்பதிவு செய்து உபேயோகப் படுத்தவும் இயலும். இதனால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாயும் கிடைக்கும்.

அறிவிப்பு : **56**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சிறந்த வாகனப் போக்குவரத்து மேலாண்மைக்காக, டிஜிட்டல் முறையில் ஸ்மார்ட் பார்க்கிங் வசதி பொது மற்றும் தனியார் பங்களிப்பு (**Public Private Partnership**) முறையில் அமைக்கப்படும். இதனால், வாகன நெரிசல்கள் குறைவதுடன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் ஏற்படுத்தப்படும்.**

**57. மின்னணு அறிவிப்புப் பலகைகளில் தனியார் விளம்பரங்களையும் இடம்பெறச் செய்தல் மற்றும் வருவாய் ஈட்டுதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு இடங்களில், 96 எண்ணிக்கையில், மின்னணு அறிவிப்புப் பலகைகள் (Variable Messaging Display) நிறுவப்பட்டு இதன் வழியாக தற்போது

பொதுமக்களுக்குத் தேவையான பொது விழிப்புணர்வு செய்திகள், சொத்துவரி செலுத்துவது மற்றும் மருத்துவ செய்திகள் அடங்கிய அறிவிப்புகள் செய்யப்பட்டு வருகிறது. மேலும், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP) புதிதாக 100 எண்ணிக்கையிலான மின்னணு அறிவிப்புப் பலகைகள் அமைத்து அதில் தனியார் விளம்பரங்களையும் இடம் பெறச்செய்வதன் வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் ஈட்டலாம்.

**அறிவிப்பு : 57**

**பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு இடங்களில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள மின்னணு அறிவிப்புப் பலகைகளைத் தொடர்ந்து தனியார் கூட்டாண்மை (Public Private Partnership) முறையில் ரூபாய் 9.00 கோடி முதலீட்டிலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதியிலிருந்து ரூபாய் 6.00 கோடி செலவினத்திலும், கூடுதலாக 100 எண்ணிக்கையிலான மின்னணு அறிவிப்புப் பலகைகள் (Variable Messaging Display) அமைக்கப்பட்டு விழிப்புணர்வு செய்திகள், அரசு விளம்பரங்கள், மற்றும் தனியார் விளம்பரங்கள் ஆகியன இடம்பெறச் செய்து அதன் வாயிலாக கூடுதல் வருவாய் ஈட்டப்படும்.**

**58. குப்பைகளை உடனுக்குடன் அகற்றப்படுவதை கண்காணித்திட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் குப்பை கொட்டும் வளாகங்களில் கண்காணிப்பு கேமராக்கள் ஏற்கனவே பொருத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இவை போதுமானதாக இல்லாததன் காரணமாக திடக்கழிவுப் பணிகளை கண்காணிக்க இயலாத நிலை உள்ளதால். கூடுதல் எண்ணிக்கையிலான கண்காணிப்பு கேமராக்களை பொருத்த வேண்டியது அவசியமாகிறது.

அறிவிப்பு : **58**

**பெருநகர சென்னை மாநகராட்சியை குப்பையில்லா தூய்மையான நகரமாக மாற்றுவது அவசியமாகிறது. இதனால் குப்பை கொட்டும் இடங்களில் உள்ள குப்பைகளை உடனுக்குடன் அகற்றுவதை கண்காணித்திட கூடுதலாக 400 எண்ணிக்கையிலான கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும். இதற்கென ரூபாய் 1.00 கோடி நிதி ஒதுக்கப்படும்.**

**59. வட்டார துணை ஆணையர் அலுவலகங்களில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் அமைத்தல்.**

தலைமையிடத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் பொருத்தப்பட்டிருக்கும் Video Wall திரை வழியாக கட்டடக் கழிவுகள், திடக்கழிவுகள், மழை வெள்ளம், இயற்கைப் பேரிடர், போக்குவரத்து, சுகாதாரப் பணி உள்ளிட்ட பணிகளை கண்காணிப்பு கேமரா வழியாக கண்காணிக்கப்படுவதைப் போன்று, வட்டார அளவிலும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் அமைப்பது அவசியமாகிறது.

அறிவிப்பு : **59**

**பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில், அமைக்கப்பட்டிருக்கும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தைப் (ICCC) போன்று, மூன்று வட்டார அலுவலகங்களிலும் வட்டார ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் (RICCC) உருவாக்கப்படும். இதனால், பொது வெளியில் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்கள் வழியாக பெறப்படும் குறைபாடுகள் மீது, சம்மந்தப்பட்ட வட்டார துணை ஆணையர் அவர்களால், உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க இயலும். இதற்காக ரூபாய் 3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## மன்றத் துறை

### 60. மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டுத்திட்ட மேம்பாட்டு நிதியை உயர்த்தி வழங்குதல்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 200 வார்டுகளில் வசிக்கும் மக்களின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்யவும் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டு திட்டத்திற்காக 2024 - 2025 ஆம் நிதியாண்டில் ரூபாய் 3.00 கோடி மாண்புமிகு மேயர் அறிவிப்பில் அறிவிக்கப்பட்டது. எனினும் வார்டு மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வது கடமையாக உள்ளதால், மாண்புமிகு மேயர் மேம்பாட்டு நிதியை உயர்த்த வேண்டியது அவசியமாகிறது.

**அறிவிப்பு : 60**

**2025–2026ஆம் நிதியாண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டு நிதி ரூபாய் 3.00 கோடியிலிருந்து ரூபாய் 4.00 கோடியாக உயர்த்துவதற்கும், இந்நிதியில் மேற்கொள்ளப்படும் புதிய பணிகள் குறித்து உரிய வழிகாட்டுதல்களை மேற்கொள்வதற்கு அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

### 61. மாமன்ற உறுப்பினர்களுக்கு வார்டு மேம்பாட்டு நிதியை உயர்த்தி வழங்குதல்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 200 வார்டுகளில் வசிக்கும் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, வார்டு மேம்பாட்டு நிதி 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூபாய் 35.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 40.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது. இந்நிதி 2024–2025 ஆம் நிதியாண்டில் ரூபாய் 40.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 50.00 இலட்சமாக உயர்த்தி மாண்புமிகு

மேயர் அறிவிப்பில் அறிவிக்கப்பட்டது. எனினும் வார்டுகளில் மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வது மாமன்ற உறுப்பினர்களின் கடமையாக உள்ளதால், வார்டு உறுப்பினர்களின் மேம்பாட்டு நிதியை உயர்த்த வேண்டியது அவசியமாகிறது.

**அறிவிப்பு : 61**

**2025 – 2026 ஆம் நிதியாண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதி ரூபாய் 50.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 60.00 இலட்சமாக உயர்த்தப்படும்.**


## நிதித் துறை

### 62. 2025-2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் காலநிலை முதலீடுகள் குறித்த அறிக்கை வெளியிடுதல்

சென்னை காலநிலை செயல்திட்டத்தின் இலக்குகள் (Chennai Climate Action Plan), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 2023ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக பெருநகர சென்னை மாநகராட்சியின் 2025–2026 ஆம் நிதி நிலை அறிக்கையில், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான முதலீடுகள் குறித்த விரிவான அறிக்கையை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**அறிவிப்பு : 62**

**2025 - 2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் காலநிலை முதலீடுகள் குறித்த அறிக்கை, பெருநகர சென்னை மாநகராட்சியால் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.**



C.P.P. 449(1) 2025-2026 / F.M.U/ 450 Bks of 19 Lvs / Mar - 2025